திரு. கொளத்தூர் கோதண்டம் : நடமாடும் கண் வைத்தியசாலை மதுரை நகரத்தைத் தவிர வேறு எந்த எந்த நகரங்களிலே இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மதுரையிலும் சென்னையிலும் தான் இருக்கின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Dr. Modi, a great eye doctor, is doing philanthropic work in other areas of the State and will the Government be pleased to bring him here and make use of his services for the people who are suffering from eye disease?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட உத்தேசம் எதும் இல்லை.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள், சென்னையிலும், மதுரையிலும் மட்டும் தான் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். கோயமுத்தூர் நகரம் மிகப் பெரிய நகரமாக வளர்ந்து வருவதால், கோயமுத்தூரிலும் விரைவில் அப்படிப்பட்ட நடமாடும் கண் வைத்தியசாலையை வைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்பொழுது எந்தச் செயற்குறிப்பும் கோயமுத்தூர் பற்றி இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி : ஐயா, படியரிசித் திட்டமும் சென்னை போன்ற நகரத்தில் இருக்கிறது. நடமாடும் கண் வைத்தியசாலையும் சென்னை போன்ற நகரத்தில் இருக்கிறது. கிராமத்திலிருக்கும் மக்களுக்கும் இத்தகைய கண் வைத்திய வசதி ஏற்படுவதற்காக மூவிங்யூனிட் போன்று, அவர்களுக்கு டெண்ட், மற்றவைகள் கொடுத்து, ஜில்லாதோறும் ஒவ்வொரு வாரம் வந்திருந்து அறுவை சிகிச்சை முதலியவைகளைச் செய்ய அரசு முன்வருமா ? இப்பொழுது செய்து கொண்டிருக்கிற இந்த நடைமுறைக்கு என்ன செலவு ஆகிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அந்த நிலையங்கள் இரண்டு மாவட்டங்களுக்கு மாத்திரம்தான் என்று இருந்தாலும், நடமாடும் மருத்துவ நிலையங்கள் பல மாவட்டங்களுக்கும் செல்லுகின்றன. எனவே, எல்லா மாவட்டங்களிலும் இருக்கும் அத்தியாவசியமான இடங்களுக்குச் சென்று சிகிச்சை கொடுத்துக் கொண்டுதான் வருகிறது. செலவினங்களைப் பொறுத்த வரையில், நடமாடும் மோட்டார் வண்டிக்கு ஆகும் பெட்ரோல் செலவு ரூ. 9,200 ஆகும். ஒவ்வொரு நிலையத்திற்கும் இரண்டு மோட்டார் வாகனங்கள் இருக்கின்றன. அவற்றுக்குச் செலவு ரூ. 40,000. கூடார அமைப்புக்காக ரூ. 10,000 செலவாகிறது. பிரசாரச் செலவு ரூ. 20,000 கண் வைத்திய சிகிச்சைக்குத் தரப்படுகிற கருவிகளுக்காக ரூ. 12,000, செலவாகிறது. "கராஜ்" கட்டுவதற்கும், வாகன வசதிகளுக்கும் ரூ. 8,000 செலவாகிறது. ஆக, சுமார் ஒரு லட்ச ரூபாய் அதற்காகச் செலவழிக்கப் படுகிறது.

***516 வின.—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவ மனையிலுள்ள எக்ஸ்ரே பிலிம் (Film) அதற்கு தேவையான பிலிம் இல்லாத காரணத்தால் தற்போது செயலற்று இருந்து வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. என். கிட்டப்பா : அந்த மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் இருக்கும் எக்ஸ்ரே சாதனங்களை இயக்குவதற்கு உள்ளவர், 25 மைலுக்கு அப்பாலுள்ள கும்பகோணத்திலிருந்து வரவேண்டியிருப்பதால், வாரத்திற்கு இரண்டு மூன்று தடவைதான் வரக்கூடிய நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்றி, மாயவரத்திலுள்ள அந்த மருத்துவ மனையிலேயே ஒருவரை நியமித்து, அங்குள்ள மக்களுக்கு உதவி செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாயூரத்தில் தான் அந்த ரேடியோகிராஃபர் இருக்கிருர். டாக்டர் கஸ்தூரிரங்கன் என்ற பெயருள்ள அந்த ரேடியோ கிராஃபர் கொஞ்ச நாள் விடுமுறையில் சென்றிருந்தார். அவர் மொத்தமாக விடுமுறை எடுக்காமல், கொஞ்சங் கொஞ்சமாக 5 நாள், 10 நாள், 15 நாள் என்று விடுமுறை எடுத்த காரணத்தால், அவருக்குப் பதிலாக வேறொருவரை நியமிக்க முடியாமல் போய்விட்டது. இப்பொழுது அவருடைய விடுமுறை முடிந்துவிட்டது. அவரே மீண்டும் பதவிக்கு வந்துள்ளார். இடையிலே அந்த மூன்று மாதங்களுக்குத்தான் முக்கிய அவசரமான கேஸ்களைப் பொறுத்து ரேடியாலஜிகல் எமர்ஜன்ஸி எக்ஸ்ரேஸ் இவைகளையெல்லாம் அந்தந்தப் பெரிய மருத்துவ மனைகளில், ரேடியாலஜி பிரிவு இருக்கும் இடங்களில் கொண்டு போய் அவர்களுக்குப் பரீட்சை செய்துகொண்டு வரப்பட்டது. சிறிய சிறிய கேஸ்களுக்கெல்லாம் திருவாரூரிலிருந்தும் கும்பகோணத்திலிருந்தும் அவர்கள் அந்த கருவிகளையே இங்கே கொண்டுவந்து அவர்களுக்குப் பரிசீலனை செய்யப்பட்டது. விடுப்பிலே சென்றிருந்த டாக்டர் கஸ்தூரிரங்கன் என்பவர் இப்பொழுது மீண்டும் பணிக்கு வந்துவிட்ட காரணத்தால் இப்பொழுது மாயூரத்தில் அத்தகைய நெருக்கடி எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து கேள்வி எண் 517. திரு. சித்தன் அவர்களுடைய கேள்விக்கு மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்கள் விடை அளிப்பார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : கேள்வி எண். 516-க்கு ஒரு துணைக் கேள்வி கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு கேள்விக்கு வந்தாகிவிட்டதே.

Drinking water schemes for Madurai district.

*** 517 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state :**

(*a*) The details of the drinking water supply schemes proposed to be implemented during Fourth Plan period in Madurai district and

(*b*) the estimated expenditure therefor ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) அண்டு (இ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : திருமங்கலம் குடிநீர்த் திட்டம் ஏற்கனவே மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதாக இருந்தது; என்ன காரணத்தினாலோ அது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் இனிமேல் வருகிற திட்டத்திலாவது சேர்த்துக்கொள்ளப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திருமங்கலம் குடிநீர்த் திட்டம் சேர்த்துக்கொள்ளப் படவில்லை. மதுரைக்கு வைகையிலிருந்து தண்ணீர் கொண்டுவருகிற திட்டம், பழனி குடிநீர்த் திட்டம், தேனி, திண்டுக்கல், கொடைக்கானல் டௌன் ஷிப், மேலூர் பஞ்சாயத்து, ஆகிய இவைகளைப் பற்றித் தான் குறிப்பு இருக்கிறதே தவிர, திருமங்கலத்தைப் பற்றிக் குறிப்புகள் இருக்கவில்லை.

Thiru K.S. KOTHANDARAMIAH : Sir, may I know the tota amount set apart in the Fourth Plan for our State for the supply of drinking water ?

The Hon. Dr. (Thirumathi) SATYAVANIMUTHU : It is proposed to take up only 31 new water-supply and water-supply augmentation schemes and a provision of Rs. 12 crores and 50 lakhs have been scheduled for this purpose. So, out of these schemes only one scheme has been taken up in the Madurai district and that is 'Ottanchatram'.